# ருவன்வெல்ல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 08 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 20 ஆம் திகதி கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ருவன்வெல்ல பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ருவன்வெல்ல பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளூராட்சிமன்ற ஓய்வுதியப் பங்களிப்பு நிதியத்திற்காக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 31,865 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஊழியர் பிணையாக 28 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 118,292 ஆன மீதியொன்று கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(இ) வருடக் கணக்காக தீர்வு செய்யப்படாது காணப்படும் ரூபா 18,981 ஆன நிச்சயமற்ற செலவுக் கணக்கு மீதியொன்றினை மீளாய்வாண்டிலும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய பல ஆண்டுகளில் 270 கடன்கொடுத்தோருக்குரிய செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 7,716,691 ஆன தொகை தீர்ப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலையான வைப்புக் கணக்குகளில் வட்டி வருமானம் வங்கிச் சான்றிதழின் பிரகாரம் ரூபா 131,867 ஆன போதிலும், பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 285,712 ஆக ரூபா 153,845 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல், கணக்கின் பிரகாரம் ரூபா 1,743,485 ஆகவும் பதிவேட்டின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 4,639,345 ஆனமையால் ரூபா 2,895,860 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

15 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 56,299,941 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 63,258,070 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,786,690 ஆக இருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153(2) ஆம் பிரிவு | மாதத்திற்குரிய நிறுத்தி வைத்தல் வரியை அம்மாதத்துடன் வரும் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தங்களின் கீழ் 15 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 37,345 கூட்டுத்தொகையான வீதவரியை 02 மாதங்கள் முதல் 10 மாதங்கள் தாமதித்து அனுப்பி வைக்கப்பட்டி ருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை viii ஆம் அத்தியாயத்தின் 10:2 ஆம் பிரிவு | வார இறுதியிலோ அல்லது அரசாங்க விடுமுறை தினங்களிலோ சேவையில் ஈடுபடுவதற்கு முன்னர் தாபனத் தலைவரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (இ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 71 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உட்படாத 27 ஊழியர்களுக்காக உரிய அங்கீகாரமின்றி ஆட்சேர்த்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் |
| (ii) நி.பி 371(2)(ஆ) | இரண்டு சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 15,000 பெறுமதியான துணைக்கட்டுநிதிகள் குறித்த நிதியாண்டின் போது தீர்க்கப்படா திருந்ததுடன், 2001 ஆம் ஆண்டிற்கு |

| | |
|---|---|
| | முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 625,651 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நி.பி 371(2)(இ) | 3 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 15,800 பெறுமதியான துணைக் கட்டுநிதிகள் குறித்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 30 முதல் 175 நாட்கள் வரையான காலம் தாழ்த்தி தீர்க்கப்பட்டிருந்தன. |
| (iv)நி.பி 396 | சபையின் வங்கிக் கணக்கிற்குரிய 2010 திசெம்பர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டு ஆனால் செல்லுபடிக்காலத்தை விஞ்சிய ரூபா 82,251 பெறுமதியான 19 காசோலைகள் தொடர்பாக நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி 570(ஈ) | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 1,298,868 பெறுமதியான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 மற்றும் 572 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமாத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 228,487 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,898,210 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ருவன்வெல்ல மக்கள் வங்கியின் 81-1001-9287744 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட 6 காசோலைகளின் பெறுமதியான ரூபா 275,437 மற்றும் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி "பணமாக வைப்புச் செய்யப்பட்ட" ரூபா 299,457 தொகை தீர்வையாகாததாகக் கருதி இதுவரை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ருவன்வெல்ல மக்கள் வங்கியின் 81-1001-9287744 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 மே 07 ஆம் திகதி தவறான வைப்பாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 53,960 தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 990 | 1,814 | 1,338 | 880 | 395 | 1,858 |
| (ii) | வாடகை | 9,227 | 8,184 | 759 | 6,960 | 5,090 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 294 | 343 | 80 | 186 | 148 | 161 |
| (iv) | ஏனைய வருமானம் | 32,652 | 25,250 | 6,481 | 11,851 | 11,851 | 535 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 235,315 தொகையான தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

முத்திரைக் கட்டணங்களாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,443,120 தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| ஆளணி வேதனம் | 26,719 | 23,390 | 3,329 | 23,358 | 22,944 | 414 |
| ஏனையவை | 18,516 | 12,430 | 6,086 | 11,122 | 7,402 | 3,720 |
| உப மொத்தம் | 45,235 | 35,820 | 9,415 | 34,480 | 30,346 | 4,134 |
| மூலதனச் செலவினம் | 21,750 | 4,697 | 17,053 | 24,070 | 2,622 | 21,448 |
| மொத்தம் | 66,985 | 40,517 | 26,468 | 58,550 | 32,968 | 25,582 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்று தரத்தினர் | 01 | 01 |
| இரண்டாம் தரத்தினர் | 25 | 24 |
| ஆரம்ப தரத்தினர் | 58 | 46 |
| வேறு (அமைய /உழைப்பு அடிப்படையில்) | - | 27 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

பெறுமதி உறுதிப்படுத்தப்படாத பயன்படுத்தப்படாமலும் றைப் பயன்பாட்டிற்குட்பட்டுமிருந்த தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட 01 உழவு இயந்திரமும் 01 கெப் வண்டியும் காணப்பட்டது.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,900,141 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 812,193 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,474,542 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 115,057 ஆக இருந்தது.

### 2.6.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,993 ஆக இருந்தது.

### 2.6.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 35,429,598 ஆக இருந்தது.

## 2.7 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) <u>கொள்வனவுகள்</u>

பொருட்கள் சேவைகளை வழங்குவதற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 135,933

பெறுமதியான மின்விசிறிகள், நீர் வடிகட்டி, டிஜிடல் புகைப்படக் கருவி போன்ற பொருட்களை விலைகோரல் மேற்கொள்ளாமலேயே நேரடிக் கொள்வனவின் கீழ் ருவன்வெல்ல ச.ண.ச சங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

போட்டி விலை விபரங்களின் கீழ் கொள்வனவு செய்யாமல் சபைக்கு நிதிசார் நட்டமொன்றும், சிறந்ததும் தரத்திலும் உயர்ந்த பொருட்களை செய்யும் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

**(ஆ) பிரயாணச் செலவினக் கொடுப்பனவு**

தலைவர் மாதத்தின் 22 முதல் 25 நாட்கள் வரையான எண்ணிக்கையில் சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே கடமைப் பயணங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 65,500 இணைந்த படியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு சபைக்கு வெளியே கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் சபை பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மக்கள் தேவைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்க உள்ள சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காணப்படும் தாமதம்

பின்வரும் செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் நீண்ட தாமதம் காணப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட ஆகு செலவு | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்த எதிர் பார்க்கப்பட்ட திகதி | 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற் கொள்ளப்பட்ட செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| * தொரனுவ கனடா நட்புறவு பாலத்தின் பகுதி யொன்றுக்கு கொங்கிரீட் இடல் | 70,654 | 2009.11.30 | 2009.12.30 | - | ஒப்பந்த சங்கம் கறுப்புப் பட்டியலுக்கு பட்டியலிடப்பட்டிருந் தது. |
| * யடத்வெல கந்த வீதிக்கு கொங்கிரீட் இடல் | 60,000 | 2009.12.13 | 2010.12.26 | - | ஒப்பநதம் செல்லுபடியற்ற தாக்கப்பட்டது. |

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வழங்கல் முகாமைத்துவம்

(இ) சொத்து முகாமைத்துவம்